வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்

# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் ..

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணி மீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 400, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஅ] யாழ்ப்பாணம் நள ஞூ தை மீ கரு - உ வெள்ளிக்கிழமை (28 - 1 - 1977) [இலை: சுஉ

## இந்து நேசியாவில் வாழ் இந்து மதத்தவர்களின் எண்ணிக்கை

# ஒருநூற்றிருபத்தைந்தாயிரம்

# அருள்மிகு ஆலயங்களோ நாடெங்கும் அநேகம்

பாரதத்திலும், ஈழத்திலும், மலேசியா—சிங்கப்பூரிலும் மட்டுமே பெருந்தொகையாக இந்துக்கள் — சைவத் திருநெறியைப் போற்றுபவர்கள் வாழ்கின்றார்கள் என்ற எண்ணம் சாதாரணமாக உண்டு. ஆனால்...! உலக இந்துப் பேரவை மலேசியாவிற் கூடியபொழுது இந்துநேசியாவிலிருந்து அம் மாநாட்டிற் கலந்து கொண்ட பேராளர்கள் கூறியவற்றிலிருந்து அப் பிரதேசமும் இந்துக்களின் இருப்பிடம் என்பது நன்கு புலப்பட்டது.

இந்துநேசியப் பேராளர்கள் யாவர் என்பதை முதலிலே குறிப்பிடுவது பொருத்தமாகும்.

சிறீ கலாநிதி ஐ. வாககோஸ் ஒக்கா
திருமதி பேராசிரியை கொடோக் வாக்கோஸ் ஒக்கா
சிறீ வெதெஸ்வரனு சுயசா
சிறீ. வேலு

இவர்கள் நால்வரும் வாலித்தீவைச் சேர்ந்தவர்கள்
திரு. மு. ஸ்ரீ இராமுலு
திருமதி. சரோஜனி இராமுலு.
இவர்கள் இருவரும் மெடான் என்ற இடத்திலுள்ளவர்கள்.
ஸ்ரீ ஜீ. சாந்தி — யெகர்த்தாவாசி,

[ வளர்ச்சி 2- ஆம் பக்கம் ]

### மாபாவிகள் யார்?

பாவம் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின், பாவம் செய்பவர்களும் இலர்; ஆகலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்.

### சைவ சமய அ. கழகம்

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகராலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 23 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 16-1-77 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

புதுவருட நிருவாகிகளாகப் பின்வருவோர் தெரிவாயினர் போஷகர் வித்திய சிரோமணி க. சீதாராமசாஸ்திரிகள், தலைவர் செ. சுப்பிரமணியம், செயலாளர் சிவ. லோகநாதன்! பொருளாளர் வே. குகநேசன்.

# அறநெறி நிற்றலே அசல் நாகரிகம்

[ காரை. ந. கனகநாயகம் ]

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அத்தியாவசியமான சில அறநெறிகள் (Moral Values) உண்டு. இந்நெறிகளாவன உண்மை, நேர்மை, அன்பு, தயை, பணிவு முதலியனவாம். இவைகள் எத்தேசத்தவர்களுக்கும், எம்மதத்தினர்களுக்கும், எந்நிலையிலுள்ளவர்களுக்கும் பொதுவானவையாகும். இவைகளைக் கடைப்பிடிக்காவிடின் மனித சமுதாயம் மிருக நிலையை அடைந்து அழிந்துவிடும் மேலும் இந் நெறிகள் அரசியற் செல்வாக்கால் மக்கள்மீது திணிக்கப்படின் அதனால் எவ்வித பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

மனிதன் உடம்பல்லன், அவனுக்கு ஆன்மா உண்டு தெய்வீகத் தன்மையுண்டு. எனவே, இந்த அறநெறிகள் மனிதனின் இயற்கைப்

[ வளர்ச்சி 2 ம் பக்கம் ]

வள்ளற் பிரானுக்கு
வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிவார்க்கு
சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும்
காளாமணி விளக்கே'

எனக் கூறுகின்றார். எமது எண் சாண் உடம்பிற்கு தலையே பிரதானம் என்பதை திருமூலர் நினைவூட்டுகின்றார், சிரசின் செயற்பாடுகளே பிரதிபலிப்பதுவாய், இவ்வாய் மிக உயர்ந்ததாக இருக்கவேண்டும். இதையே வள்ளுவரும் 'யாகாவாராயினும் நாகாக்க' எனக் கூறிப்போயினார்: இவற்றிலிருந்து அக்கால மக்களின் சைவ அடிப்படை அமைப்பு விதிகள்யாவும் அர்த்தமுள்ளவையாக விளங்குவதைக் காணலாம்.

ஒரு கிராமத்தின் சிறப்பு அவ்வூர் ஆலயச் சிறப்பிலேயே தங்கியிருக்கின்றது என்று கூறலாம் இவ்வகையில் இன்று திருக்குட திருமஞ்சன நன்னீராட்டு விழாக்காணும் சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம், யாழ் நகரிலிருந்து எட்டுக

( வளர்ச்சி 3-ஆம் பக்கம் )

## திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழாக் காணும்

# சிவசிதம்பரேசுவரர்

[ திரு. எஸ். கே. சிவபாலன் நாச்சிமார் கோயிலடி ]

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மானாக விளங்கும் சிவபரம் பொருள் முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்குவது எமது சைவ சமயம். சைவம் சிவத்தோடு சம்பந்தமுடையது. சிவலிங்கவழிபாடு அநாதிதொட்டே இருந்து வருவதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். சிந்துநதிப்படுக்கைகளில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இறைவன் சிவலிங்கரூபத்தில் எழுந்தருளியே ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள்புரிகின்றார் என வேதமொழிகின்றது.

சிவாலய அமைப்புவிதிகளில முதல் விளங்குவது தூலலிங்கமாகிய இராஜ கோபுரத்தை முன் வணங்க வேண்டும். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்ற ஆன்றோர் வாக்கும் சிந்திக்கற்பாலதாகும். மனித உடலின் அமைப்பைக் கொண்டு அமையப்பெற்றவையே ஆலயங்கள், இதைத் திருமந்திரத்தில்

'உள்ளம் பெருங் கோயில்
ஊனுடம்பு ஆலயம்

பேராசிரியர் கனகசபாபதி

# ஆசைக்கொரு பேராசிரியர் அருமைக்கொரு சான்றோன்

[ வித்துவான் மு. கந்தையா, B. A. ஏழாலை ]

முன்னாள் இலங்கைப் பல்கலைக்கழகக் கணிதவியற் பேராசிரியர், இந்நாள் யாழ்-வளாக விஞ்ஞான பீடாதிபதி ஏழாலை அம்பலம்-கனகசபாபதி இவர் திடீர் மறைவு உற்றார் பெற்றார் மட்டிலன்றி நண்பர், மாணவர், ஆசிரியர், அபிமானிகள் அனைவரையும் ஒரு உலுப்பு உலுப்பி விட்டிருக்கின்றது.

யாழ்-வளாகம் ஒரேயடியாக அவர் வாசஸ்தலம் நோக்கி அணி திரண்டு விட்டது. 5-.-77இல் நடைபெற்ற அவர் தம் அந்தியக் கிரியை வைபவத்தைத் தரிசித்த ஆயிரம் ஆயிரங் கணைகளில அழாத கண்கள் மிகச் சிலவே.

"புரந்தார் கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்துகோள் தக்க துடைத்து"

இப்படித் திருவள்ளுவர் சொன்னதும் ஏதோ இருக்கவே இருக்கிறது. ஆனால், இவர் மறைவால் ஏற்பட்ட துயர் நிலைமை இப்படிச் சாக்கு சொல்லிச் சமாளிக்கக் கூடியதாக இல்லை.

பேராசிரியரான பேராசிரியர் போய்விட்டாரே என்றது பிறகு பீடாதிபதியான பீடாதிபதி போய்விட்டாரே என்பதும் பிறகு, மனிதருயிருந்த மனிதன் மறைந்துவிட்டாரே என்ற மனவேதனையே முன் நிற்கின்றது.

நிலத்தில் நடக்கும் போது கால் கூசி மெல்ல ஒதுங்குவதன்றிப் பெலத்து மிதிக்கும் தன்மை அவர்

( வளர்ச்சி 3-ம் பக்கம் )

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஸ்ரீ தை மீ கரு௨ வெள்ளி

## சுன்னைக் குமாரசுவாமிப் புலவர்

நற்றமிழ் நடைமுறைப்படுத்திச் சைவத் துறை விளங்க வைத்த பெருமகனார் நாவலரின் வழி வழி வந்த செந்நெறி வளர்த்த பெரும் பரம்பரையில் சுன்னை நகர் குமாரசுவாமிப் புலவர் முன்னணியில் நின்றவர். அன்னாரின் நினைவு நன்னாள் தைத்திங்கள்.

நாவலர் நெறி நின்றோர் என்று கூறுமிடத்து உண்மைச் சமயிகளாக வாழ்ந்தவர்கள் இவர்கள் என்பது போதரும். அந்நெறிதான் என்னே எனின் காட்டுதும்.

சைவ சமயமே மெய்நெறி என்றறிந்து உணர்ந்து அதன் குறிக்கோள், ஆகாதன விலக்கி ஆவன இயற்றுதற்கு அல்லும் பகலும் அனவரதமும் அரன் அடி பரவி நிற்றல் என்று சுருங்கச் சொல்லலாம்.

ஆகாதன யாவை? ஐம்பெரும் பாவங்கள். கொலை, களவு, கள், காமம், குருநிந்தையென்று கூறுப. பொய் இவை யாவுக்கும் அடிப்படையாகவுள்ள தீமை என்பது வெளிப்படை. எனவே வேண்டிய விபரீதங்கள் யாவற்றையும் தவிர்த்தலைச் சைவ நீதியொன்றே அழுத்தமாக வேண்டுகின்றதென்று சித்தாந்த வித்தகர் சைவபோத ஆசிரியர் ஸ்ரீ சிவபாதசுந்தரம்பிள்ளை அடிக்கடி எடுத்துக்காட்டுவர். பஞ்சமா பாதகங்கள் எல்லாவற்றிலும் அகப்படாதவராய் வாழ்தல் நெறிநின்றார் பெருமையாயிருந்தது குறிப்பிடத் தக்கது. அவ்வழி சென்றோர் ஆகும் செயல்களையே ஆற்றி வந்தனர் என்றும் பொழுது பூரணமாகப் புனிதராய் வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது.

ஆகும் பணிதான் யாதோ எனின் ஆலயம் தொழுதல், பேணுதல், விருந்தோம்பல், ஈகை, கற்கவேண்டியவற்றை அறிதல், கற்றாங்கு நிற்றல், கல்விச் செல்வத்தை நல்லுலகில் வளமாக்குதல் என்று தொகுத்துக் கூறுதல் பொருந்தும்.

இவ் வகையில் மெய்நூல் கற்று மெய்நெறி நின்று வையகம் உய்ய ஆசானாய் அமர்ந்து நன் மாணாக்கர் மரபு வளர்த்து நூல்கள் இயற்றி மொழியும் சமயமும் நிலவ வைத்த பேரறிஞர்களில் சிலர் குமாரசுவாமிப் புலவர் மதிப்புக்குரியவர். நாவலர் நற்கையார் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசானாக விளங்கியமை புலவரின் அருமைக்குச் சான்றாகும்.

சுன்னைப் புலவரின் வாழ்க்கை வரலாற்றை இக்கால இளஞ் சந்ததியினர் அறியக்கூடிய வகையில் கைநூல் வடிவமாக வெளியிடல் பொருத்தமான நினைவுச் சின்னமாகும். மேலும் அன்னாரது நினைவாக ஓர் கலைச் சின்னத்தைச் சுன்னைப் பதியில் நிறுவ மாணாக்கர்பரம்பரை முன்வரவேண்டும். செய்கன்றி மறவாச் சீரியோர் சிந்திப்பார்களாக.

## இந்தோநேசியாவில் வாழ்

( 1 ஆம் பக்கத்து வளர்ச்சி )

இந்து மதம் தமது சொந்தமென்ற இறுமாப்புடன் இவர்கள் இம் மாநாட்டிலே இடையிடையே உரையாற்றும்பொழுதெல்லாம் ஏனையோரை "வாருங்கள் எங்கள் தேசத்துக்கு வந்து பாருங்கள்; இந்து மதாபிமானத்தை என்று உள எழுச்சியும் — உணர்ச்சிப் பெருக்குங் கொண்டு கூவி அழைப்பது போன்றிருந்தது.

இந்துனேசியா என்பது பற்பல தீவுகளைக் கொண்ட மா நாடு. அங்கு வாழ் மக்களிற் பெரும்பான்மையோர் இசுலாமிய மதத்தினர். சிறுபான்மையினர் என்ற வகையிலே இந்துக்களின் மதப்பற்று மதிப்பிற் குறைவில்லை. இதற்குச் சான்று ஆங்குள்ள அநேகம் அநேகம் ஆலயங்கள்.

(வரும்)

புதிர் உணவுப் பொலிவு காணும்

# தைப்பூசப் புனித நாள்

[ சைவப்புலவர் கு. வி. மகாலிங்கம் ]

'இலமென்றசைஇ
இருப்பவரைக் காணின்
நிலமென்னும் நல்லாள்
நகும்.

வான்புகழ் கொண்ட நாடு தமிழ்நாடு என்ற பெருமைக்கு வித்திட்ட வள்ளுவரின் வாய்மொழி இது.

உழைப்பிலேதான் மனிதன் வாழவேண்டும். உழைத்துண்ணுகின்ற வாழ்க்கைதான் ஒப்பற்ற வாழ்க்கை என்ற உண்மையை உறுதியாக வள்ளுவர் இந்த மணிமொழி மூலம் மண்ணுலகுக்கு வழங்கினார்.

அசையாமல் இல்லையே என்று இருக்கின்ற மனிதரைப் பார்த்து நிலத்தாய் சிரிப்பாள் என்று வள்ளுவர் சொல்லி மக்களெல்லவரையும் உழைக்கத் தூண்டுகிறார். எனவே உழைப்பில் நிறைவு காண்பதற்கு முனைந்தவன் தமிழ் உழவன் (விவசாயி)

மாரி காலத்தின் ஆரம்பத்தில் வரண்ட நிலம் குன்றுகிறது. காய்ந்த வாழ்வு கனிவு பெற ஏர்கொண்டு வயலைச் சீர் செய்தான் புனலுண்டு வயல் பொங்கி வளர்ந்தன. தன் உழைப்புச் சக்தியெல்லாம் தண்ணார்ந்த கதிராகியதைக் கண்டுகொண்டான் நிமிர்ந்த கதிர்கள் சூலுற்று நிலத்தில் சாய்ந்தன. நெற்றி வியர்வையின் முத்துக்களாய நெல்மணிகண்டு எல்லையற்ற இன்பம் கொண்டான்.

ஊரெல்லாம் வாழ ஏர் பிடித்த அவன் இதயம் ஊரோடு உண்ணும் பண்பினன் புதுமையாகப் பூத்த நெல்லு மணிகளை கொய்தான்.

"கரும்பினை உடைத்து
வள்ளல்
கடாவினை அடித்தபோது
செறிந்தன முத்து..."

கரும்பார் தடியினை முறித்து வயலில் உழுது கடாவை அடித்தபோது சிதறின நெல்லு முத்துக்கள் என்று பழமையான பாடல். முதன் முதலாக நெல்லைக் கொய்யும் காட்சியை வர்ணிக்கின்றது இவ்வாறு பூத்த முதல் நெல்லைக் கொய்யும் நாள் புதிர் கொய்யும் திறமையாகும்.

### புதிர் கொய்யும் விதமும் புதிதுண்ணலும்

வயலின் வடக்கு அல்லது கிழக்குப் புறத்தில் கட்டுவரம்புகளின் நாற் சந்தியில் முளைக்கட்டை நாட்டி. அதில் மாவிலை வேப்பிலை கட்டி தோரணங்களுடன் விக்கினேஸ்வரனின் பிரதிமை கோமயத்தினால் உண்டாக்கி வைப்பர் தனது குலதெய்வத்தைக் காவல்செய்து பயிரை அழியாது பேண வேண்டுவான் விக்கினேஸ்வரனுக்கு பாலறு சாத்தி தேங்காய் உடைத்து கற்பூரம் காட்டி காவல் செய்வான் அதன்பின் கலையில் தலைப்பாவைக்கட்டி கம்பீரத்துடன் சென்று வடக்குப் பக்கத்தில் அரிவாள் கொண்டு முதற் கதிரை அறுவடை கொய்வான். அதை முளைக்கட்டை அடியில் வைத்து வணங்கித் தனது விளைவு அதிகரிக்க பொலி! பொலி! எனப் பிரார்த்திப்பான்.

பின்னர் கதிர்க்கட்டை தலையிலே கொண்டு தேவார திருவாசகங்களை ஓதியபடி தனது வீட்டுக்கு நேரில் வருவான். வீட்டுவாசலில் வந்ததும் இல்லாள் ஆலாத்தியெடுத்து வரவேற்பாள். இல்லத்தின் முற்றத்தில் உள்ள பூரண கும்பத்துக்கு முன்னர் அவன் செல்வான். பயிர்களைப் பூச்சி அழியாதும், இயற்கை நோய் நெற்கதிரை எரியாதும் பிரார்த்தனை செய்வார்கள் (எல்லோரும் கூடி)

பூரண கும்பத்தை வலம் வந்து களம்பலியாக அறுவடை செய்த ஆயுதத்தால் நிலத்தில் ஒருதரம் கொத்துவான். மாவிலை வேப்பிலை சேர்த்து முதலில் வீட்டின் கன்னி மூலையில் கட்டியபின் மாட்டுக் கொட்டில் உட்பட குறிப்பிட்ட இடங்களில் சட்டுவான். புதுநெல்லைக் காய வைத்து ஆலயத்திற்கு எடுத்

( வளர்ச்சி 8ம் பக்கம்

## அறநெறி நிற்றலே அசல் நாகரிகம்

1 ம் பக்கத்து வளர்ச்சி

பண்புகளாக மாறும்போது தான் சமுதாயம் முன்னேறும். வாழ்க்கையில் நாளாந்தக் கருமங்களிலும் இந்நெறிகளைக் கையாளுவதையே உண்மையான நாகரிகமெனலாம். "ஓர் அறுவைச் சிகிச்சைக்குச் சுத்தம் எவ்வளவு பிரதானமோ அவ்வளவு பிரதானமாக உள்ளது சமுதாய முன்னேற்றத்திற்கு உண்மை கடைப்பிடித்தலாகும்".

It is as important as aseptic conditions in the operation theatre என்று இராஜாஜி கூறியதை நாம் இப்போது நினைவு கூர்தல் பொருத்தமுடையது அரசியற் பூசல்கள் நாட்டிலே தாண்டவமாடிய காலத்தில் அப்பெரியார் "சமயம் மட்டுமே எமது அரசியல் வாதமாகட்டும்" என்று கூறியதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, இந்தப் பண்புகள் மனிதனது நாளாந்த வாழ்க்கையில் எந்த அளவுக்கு இடம்பெறுகின்றன வென்று சிந்திக்கவேண்டியது நமது கடமையாகும் இத் தொடர்பில், வேறு நாடுகளின் நிலைமையைக் கவனிப்பது எமக்கு விழிப்பைக் கொடுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் யப்பானுக்குச் சென்று திரும்பியவரும், இலங்கை அரசாங்கத்தில் நிரந்தரக் காரியதரிசியாக இருந்தவருமாகிய திரு. மாணிக்க இடைக்காடர், யப்பானிலுள்ள வங்கிகளில் பணம் கொடுக்கும் சிறுப்பர்மாரும் பணம் வாங்கும் சிறுப்பர்மாரும் எமது நாட்டவர்களைப் போலத் தனித்தனிக் கூடுக்குள்ளிருந்து கருமமாற்றுவதில்லையென்றும், இரு பகுதியினரும் ஒரு பெட்டியிலிருந்தே பணத்தை வாங்குவதும்கொடுப்பதுமாகிய கடமைகளைச் செய்கிறார்களென்றும். ஆனல், அங்கே களவோ பணக்குறைவோ (Shortage) இல்லையென்றும் கூறியிருப்பதை நாம் மறப்பதற்கில்லை அன்றியும் அவர் மக்கள் யாராவது பொருள்களை இழந்தால் அவைகளைக் கண்டெடுப்பவர்கள் சமீபத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற் சேர்ப்பார்களென்றும், பிரயாணிகள் சாமான்களுடன் போகும்போது தேவை நோக்கி அச்சாமான்களை ஓரிடத்தில் வைத்துவிட்டுத் தமது கருமங்களை முடித்துக்கொண்டு திரும்பி வந்து எடுப்பார்களென்றும் யாரும் அச்சாமான்களை எடுக்க மாட்டார்களென்றும், யப்பானியர் மிகப் பண்புள்ளவர்களென்றும் அவர்களது பாஷையில் அசப்பிய வார்த்தைகள் இல்லையென்றும் கூறியிருக்கிறார். இவ்விதமான மக்கள் வாழும் யப்பானில அன்புக்கும் விசுவாசத்திற்கும் குறையேது?

இராமக் கிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவரும், அகில உலக சமயப் பேரவைக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்றவரும, பெருஞ் சிந்தனையாளரும் பிரபலஎழுத்தாளருமாகிய சுவாமி இரங்கானந்தா அவர்கள் யப்பானிலும் ஜேர்மனியிலுமுள்ள தொழிற்சாலை ஊழியர்கள் பக்திசிரத்தையுடனும் நாட்டுப்பற்றுடனும் கடமையாற்றுகின்றனரென்று கூறியிருக்கிறார்கள்.

இவ்விரு நாடுகளின் கடுகதி முன்னேற்றத்திற்குக் காரணம் அவைகள் உலக மகாயுத்தங்கள் இரண்டாலும் தாக்கப்பட்டு அழியும் நிலையில் இருந்தமையே யாகும். "நாம் மரித்துப் பிறக்கவேண்டும்" ("We must be born") என்று இயேசுநாதர் கூறியது போல எமது சமுதாயமும் மறுமலர்ச்சி அடையவே வேண்டும். இது அசாத்தியமானதன்று. மறுமலர்ச்சி அடைவதற்கு அவசியமானது சாதனையே. அடிவேர் இன்னும் முற்றாகச் சாகவில்லை; தெய்வ பக்தி உண்டு. நல்ல சமயம் உண்டு; ஆற்றல் உண்டு. ஆக நாம் செய்ய வேண்டியது களை பிடுங்கிக் கிருமிகளை அழித்து உரமிட வேண்டியதுதான். சாதனை எங்கள் ஒவ்வொருவரையும் பொறுத்தது. ஓர் அறிஞர் பொங்கலைப்பற்றிக் குறிப்பிட்டபோது தண்ணீரைத் தருமமாகவும், அரிசியைச் சத்தியமாகவும், பாலை அன்பாகவும், சர்க்கரையைக் கருணையாகவும் விவரித்தார்.

எங்கள் ஆத்மஞானமும் நன்கு பொங்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் தவிர்மின்!

[ சைவப்புலவர் வ. சுப்பிரமணியம் புலோலி ]

பொய்யை யொழியாய் புலாலை விடலாய் காளத்தி
ஐயரே யென்றாய் அறஞ்செய்யாய் வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத் தைந்தோதாய்
மனமே யுனக் கென்ன மாண்பு
காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்
ஈதல் மறுத்தலிவை கண்டாய் — போதல்
இனியாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி
எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்தவேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
கோவதைகள் நூறு பழிசெய்த தொருவேதம்
வேதியர்கள் நூறு பழிசெய்த தொரு பேதை
பேதையர்கள் நூறு பழி செய்த தொருபாலன்
பாலகர்கள் நூறுபழி செய்த தொரு பொய்ய
ஆனந்தனர் மகளிரன் பாங்குழந்தை வதை
மானர்தரும் பிசத வார்த்தை இவை — மேனிரையே
கூறலருபாலங்குறையா தொக்கொன்றுக்கு
நூறதிக மென்றே நுவல்
மெய்யேசிறந்த செருநலமா மெய்யே யெனையும் நிலைபெறுத்து
பெய்யாலழகால் கதிர் பெறவுந் தத்தந் தொழிலின் விலகாவா
மெய்யே வெளிக்குமிருப்பிடமா மெய்யே மெய்யே சிவமாகு
மெய்யே பிரமபதமுமெனப் புகன்றுன் வினைதீர் காசிபனே
(காசி புராணம்)

செய்மையண் மையிலுயிர்கொரு துணையெனச் சிறந்த
வாய்மையாயலகந் தூய்மையா மற்றிப்புறத்தகத்த
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின் வேறுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெனக் கருதி
புலையனும் விரும்பாத இப்புன் புலால்யாக்கை
நிலையொருமீயடியிரினு நெடிதுறச் சிறந்த
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வதுகரியேம்
உ புணர்ந்த நீ எமக்கிது கழறுவதழகோ
இம்மை அம்மை வீடென மறைபுலங் கொள்வியம்பு
மும்மையுந் தரு முறையுடைத் தெறுநிலை மூரணி
எம்மை வாழ் வயிற்றடக்கி நீடுமிழ் கூர வெரிவாய்
வெம்மை விடர் நரகுலக்கின் மெய்யை விடேமால்
பதியிழந்தனம் பாலனை முந்தனம் படைத்த
நிதி இழந்தனம் இனிநமக்குளதென நினைக்கும்
கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்.
வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை இலாத சொலல்
பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்
நன்மை பயக்கு மெனின்
புன்றொழிலாகிய பொய்யும் வாய்மையா
மொன்றொருமெருட் பயனுதவு மாயிடி
னென்றனர் சுரகுரு வித்திரன்பத
நின்றிட வீதொரு நிகழ்ச்சி கூறுவாம்

கந்தபுராணம்

மெய்யுரை செயிற் போமெனமே வியது வீணு
மையமிதினிக்கில யதனுற் புரையிலாத
பொய்யுரை மெய்யொடு பொருந்த மெனநாடித்
தையலலரோடிதுதனைப் பகரலுற்றான்.

அரிச்சந்திரபுராணம்

பொய்யாவது உள்ளதை இல்லாததாகவும் இல்லாததை உள்ளதாகவும் கூறுதல். பொய்யே சகல பாவங்களுக்கும் ஏதுவாய் உள்ளது. விபசாரஞ் செய்வோன், கள்ளுண்போன், சூதாடுவோன் ஆகியவர்கள் தங்கள் குற்றங்களைப் பொய்சொல்லி மறைக்கலாமெனக் கருதியே பெரும்பான்மையுஞ் செய்கிறார்கள். ஒருவன் பொய்சொல்லா தொழிவனேல் அவன் களவு முதலிய ஏனைய குற்றங்களையும் நீக்கவேண்டியிருக்கின்றான்; இதற்குத் திருஷ்டாந்தம் வருமாறு. ஓரூரிலே ஒருவன் பலபாவங்களையும் அஞ்சாது செய்து வந்தான். அவனுடைய குரு இப்படிப் பாவங்களைச்செய்து ஏன் கெடுகின்றாய், இனிஇவ்வாறு செய்யாதே என்று பல புத்திகளைக் கூறினர். எல்லாப்பாவங்களையும் என்னால் விடமுடியாது உமதபிப்பிராயப்படி யாதாயினுமோர் பாவத்தைச் செய்யாது விடுகிறேனென, குரு பொய் சொல்லலாகிய பாவம் ஒன்றையாயினும் ஒழித்துவிடு என்று கூறினர் அவ்வாறு செய்வதற்குச் சம்மதித்த சீடன் ஓரிரவு அவ்வூர் அரசனுடைய அரண்மனைக்குத் திருடச் சென்று சமயம் பார்த்துப் பதுங்கி நிற்க மாறுவேடம் பூண்டு நகர்ச்சோதனையின் பொருட்டுப் புறப்பட்ட அரசன் அவனைக் கண்ணுற்றுத் திருடனென்றறிந்து நீ இங்கே வந்த காரணம் என்னை விளம்புதி என்று கேட்க அவன் இராசமாளிகையிற்திருடவந்தேனென்றான்.

அதுகேட்ட அரசன் ஆச்சரியத்தவனாய் அவன் செய்கை முழுவதையும் அறிய விரும்பி நானுமிங்கே திருடவந்தேன் எனக்கும் பாதி கொடு என்றான். திருடன் அதற்குச் சம்மதித்து அரசனைக் காவல்வைத்து அரண்மனைச் சுவரில் கன்னம் வைத்து உட்பிரவேசித்து ஓர்பெட்டியில் விலையுயர்ந்த இரத்தினங்கள் மூன்றனுள் இரண்டை எடுத்துக்கொண்டு பாகம்பண்ண இயலாமையால் மற்றொன்றை அவ்விடத்தில் வைத்துவிட்டு வெளியேவந்து அரசனுக்கொன்றும் தனக்கொன்றுமாக எடுத்தான் அவனுடைய விருத்தாந்தங்களையெல்லாம் அறிந்த அரசன் கள்வன் சென்றபின் அரண்மனையிற் புகுந்து பெட்டியில் ஓர் இரத்தினம் இருக்கக்கண்டு சந்தோஷித்து அடுத்த நாட் காலையில் அமைச்சரைப் பார்த்து நம்முடைய அரண்மனையினுள்ளே கள்வர் புகுந்ததாகத் தெரிவதால் பெட்டியைத்திறந்துபார் எனவும் மந்திரி அவ்வாறு செய்தபோது ஆங்கோர் இரத்தினம் இருக்கக் கண்டு அதைத் தான் அபகரிக்க எண்ணி அரசனை நோக்கி விலையுயர்ந்த இரத்தினங்களைக் கள்வர் திருடிச்சென்றனர் என்று கூற அரசன் அவனை நீக்கி சத்தியத்திற்சிறந்த அத்திருடனை மந்திரியாக்கினன் ஒரு பொய் சொல்லப்புகுந்தவன் தன்பொய்யைத் தாபிக்கும் பலபொய்களைச் சொல்ல வேண்டியவனாகின்றான். வையயத்தில் மெய்சொன்ன போதும் பிறர்பொய்யெனவே கருதும்படி யாட்டிற்காயினும் பொய் சொல்லுதல் தீமை பயக்கும் வாய்மை

## புதிர் உணவுப் பொலிவு காணும்

2ம் பக்கத்து வளர்ச்சி

துச் சென்று வழிபடுவான், பின்னர் மீண்டும் வீட்டிற்கு கொண்டுவருவான்; அதன் பின்னரே நெல்லுக் குற்றப்பட்டு ; அரிசியாக்கப்படும். பகல் அது அமுதாக அமைக்கப்பட்டு பலகறிகளுடன் பாக்பழம் சேர்த்து தலைவாழை இலையில் படைத்து வணங்குவான். புதிருணவின் முதற்பகுதி அடுக்களை அடுப்புக்களுக்கு அவிர் பாகமாக இடப்படும்.

அடுத்து குடும்பத்தலைவனா விவசாயி புதுச் சாதத்தைப் பல கறி வகைகளுடன் பாலும். பழமும் சேர்த்துப் பிசைந்து தனது குடும்பத்தினருக்கு வழங்குவான். தனக்கு அன்னமெழுக்கும் மனைவிக்கு கணவன் அன்னம் வழங்குவது புதிர் உண்ணும் தினத்திலேதான்.

இந்தப் பண்பாடோடொட்டி பாரம்பரியமான புதிர் எடுத்து உண்ணுவது தைமாசத் தொடக்கம் தைப்பூசம்வரை தைப் பூசம் 03-02-7-ல்

எப்படியேனும் ஒவ்வொரு விவசாயியும் தைப்பூசத்திலே புதிர் உண்ணவேண்டுவான். தைப் பூசவிழாவாகவும், விவசாய மக்களின் பிள்ளைகள் நேர்த்திக்காவடி எடுக்கும் விழாவாகவும் அமைந்துள்ளது.

## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

### வழக்கு இல- 12701 / ஈடு

1. ஆறுமுகம் சின்னையா கொற்றன் கலட்டி, வல்வெட்டி வல்வெட்டித்துறை —வாதி
2, வேலுப்பிள்ளை கந்தசாமி கைம்பெண் செல்லம்மா இறகனைபற்றை, சமரபாகு. கான் சாலடி வல்லுவெட்டி - பிரதிவாதி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1977ம் ஆண்டு பங்குனி மாசம் 1ந் திகதி (1-3-1977) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறக வடமாராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று சயரபதாதேவன் குறிச்சியிலுற 'இறசகப்பற்றை'' நில 12 இதில் நிலம் குளி 16½ இது ஆட்சிப்படி நில 7, எல்லை கிழக்கும் டெக்கும் ஒழுங்கை மேற்கு சின்னதுரை கைம்பெண் சின்னம்மாவுக்குடைய ஆதனம தெற்கு வேலுப்பிள்ளை பெண் இலட்சுமிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக் குட்பட்ட நிலம், வீடு, செய்பயிர்கள், பனைகள் அடங்கலிற் நில 3ம் கிழக்கு மண்டபத்தில் அரைவாசியும் வீடு குசினியும சீதனமாகக் கொடுத்தது நீக்கி மிகுதி அடங்கலும் (மதிப்பீட்டவிலை ரூபா 12000/-

### தீர்வைத்தொகை

| | |
|---|---|
| தீர்வைத்தொகை ரூபா | 5930 00 |
| வட்டி ரூபா 6000/-க்கு 12 வீதப்படி 26-7-74 தொடக்கம் 23-10-74 வரை தொகை | 120 00 |
| தொகை | 6050 00 |
| வட்டி ரூபா 6050/- க்கு 5வீதப்படி 23-10-74 தொடக்கம் 23-7-75 வரை | 226 80 |
| தொகை | 6276 80 |
| 23-7-75ல் கொடுபட்டது | 3500 00 |
| மிகுதித்தொகை | 2776 80 |
| வட்டி ரூபா 2776/- க்கு 5வீதப்படி 23.7.75 தொடக்கம் 1. 3. 77 விற்பனவு வரை | 219 64 |
| வழக்குச் செலவு | 150 00 |
| மொத்த ரூபா | 3146 44 |

க. நல்லலிங்கம்
வி. எம்- ரோட் நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
பருத்தித்துறை 5 11.76 85 5-11 விலைமதிப்பாளரும்

எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமையிலாத சொல்' (உ+ம்) கானகத்தில ஓர் வேடன மானைத்துரத்திச் செல்ல அது ஓர் முனிவன் ஆச்சிரமத்தில் ஒழிக்க அம்மானைத் துரத்திப்போன வேடன் அம்முனிவனை நோக்கி, சுவாமி இங்கெறியோ மான வந்ததுண்டோ என வினவ அம்முனிவன மறுபப்னல் அப்பொய் குற்றமாகாது. அவ்விடத்தில் ஓர்சீவனை இரட்சித்த புண்ணியமே விசேடமுடையது. பொய்ச்சான்று சொன்னவரும் பொய்வழக்குப் பேசினவரும் வழக்கிலே நடுநிலைமையில் வழுவித் தீர்ப்புச் சொன்னவரும் எழு பிறப்பில்விஞ்சிய எல்லாப புண்ணியங்களையும கெடுத்தவராவார், பிரமவதையும், சிசுவதையும், தந்தைவதையும் செய்தவராகும். அவரை இயமதூதர்கள வாயிலே அடித்து நாக்கையறுத்து பல துக்கங்களையும உறுவிப்பார்கள். மனிதப்பிறப்பிலே பிறவிக் குருடரும, செவிடரும, குட்டை நோயினரும வாய்ப்புண்ணினரும் ஊமைகளாய்ப் பிறப்பர் ஆதலால் எருமை பொய் சொல்லுவதொழித்து மெய்யைக் கடைப்பிடித்து ஒழுகுவார்களாக.

## நாம் கடைப்பிடிக்க வேண்டிய பத்துச் செயல்கள்

1 திருவெண்ணீற்றின் பெருமை
2. உருத்திராட்சத்தின் பெருமை
.. திருவைந்தெழுத்தின் பெருமை
4 சிவத்தியானத்தின் பெருமை
5. சிவபுண்ணியத்தின் பெருமை
6 சிவனடியார்கள் அடைகின்ற செல்வம்
7 சிவார்ச்சனை புரிதலின் செல்வம்
8. சிவஞானத்தின் நன்மை
9. [illegible] மை
10. [illegible] ன் நன்மை

### கோணவளை வைரவர் கோயில் திருவிழா ஆரம்பம்

செட்டிகுவிற்பதி கோணவளை வைரவர் கோவில் திருவிழா ( -ᵛ-77) செவ்வாய் ஆரம்பமாகிறது. விழாக் காலத்தில் தினமும் நல்லைக் குருமணியவர்கள் கதாப்பிரசங்கம் நிகழ்த்த ஒழுங்கும் செய்யப்பெற்றுள்ளது.

### திருக்குடத்திருமஞ்சன

2-ம் பக்கத்து வளர்ச்சி

கல் தொலைவில் சங்கானை கானரநகர், வட்டுக்கோட்டை, பண்டதரிப்பு ஆகிய கிராமங்களுக்கு மத்தியில் இன்று கம்பீரமாக காட்சி கொடுக்கும் இராஜ கோபுரத் திருப்பணி இவ்வூர் அன்பர் ஒருவராலேயே கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது பரிபாலன சபையாரின் அயரா உழைப்பும் ஆலய அர்ச்சகரின் சீரிய பணியுமே இவ்வாலய வளர்ச்சிக்குக் காரணமாகும். இன்று புதுப்பொலிவு பெற்றுத் திகழும் இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள் யாவும் ஒழுங்கான முறையில் நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தில் அமைந்துள்ள நடேசர், அம்பாள் விக்கிரகம் தனிக்கலை கூடையது, மார்கழித் திருவாதிரையில் பஞ்சரதபவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

சித்தன் கேணியூர் மத்தியில் சிவம் பெருக்கும் திருத்தலமாக விளங்கும் சிவசிதம்பரேஸ்வரர் ஆலய திருக்குடத் திருமஞ்சனத் திருவிழாவாகிய இன்று திருமஞ்சனவிழாக் காணும் சிதம்பர நடேசனை திரிகரண சுத்தியுடன் மனம் மொழி மெய்களால் இறைஞ்சி வையகதுள் வாழ்வாங்கு நல்ல வண்ணம் வாழவேண்டி வாழ்த்துவோமாக.

### பேராசிரியர் கனகசபாபதி

2- ஆம் பக்கத்து வளர்ச்சி

பாலில்லை; அவர் தம் பேச்சு, செயல், நடையின் துல்லிய சுபாவங்களுக்கு இதுவோர் கலந்த அறிகுறி. கோபம், கண்டிப்பு. சினம், குறுகுறுப்பு எதுவுமில்லாமல் மாணவர்களை நெறிப்படுத்திய மகா சதுரர் அவர்,

அவர் நால்வருணத்திக் அந்தணர்; மனிதவியலில் மகான்; மாணவராட்சியில் மனோவசியம்; கர்ம சாதனையில் சாந்தி; பகவத்கீதையில் கர்மயோகம்; திருக்குறளில் சான்றாண்மை. "அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்து சால்பூன்றிய தூண்". ஐந்தும் அவருடைய உடன்பிறப்புக்கள்.

பெற்றோர்க்கு ஒரு சற்புத்திரர், உற்றோர்க்கு ஒரு சற்பாத்திரர். பலகலைக் கழகத்திற்கு ஒரு சற்குரு. எவர் சொன்னால் மாணவர்கள் எதையும் ஏற்று நடப்பார்களோ அவரே இவர் அவர் சற்குருத்துவத்தின் சால்பு அது. — —... பேராதனைக் குறிஞ்சிக் குமரன் கோயிலில் அதனை கண்டபேறு,

பேராதனைக் குறிஞ்சிக் குமரன் கோயிலில் அவர் ஆன்மீகம பிரதிஷ்டையாய் இருக்கிறது. யாழ்ப்பாண விஞ்ஞான பீடத்தில் அவர் இருதயம் பிரதிஷ்டையாய் இருக்கிறது. குங்குமம் எங்கும் போய்விடவில்லை. ஆலம் மட்டும் பிராப்த கதியிற் பிரிந்து போய்விட்டது. இக் கருத்தே இரங்கும் உள்ளங்களுக்கு அமைதி தரவேண்டியது. வேறு வழி எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**THOUGHTS TO BE TREASURED**

விஞ்ஞானர் நால்வரும், மெய்ப் பிரளயாகலத்
தஞ்ஞானர் மூவரும், தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரும், ஆகும் பதின்மராம்
விஞ்ஞான ராதியாம் வேற்றுமை தானே.

There are four sub-divisions of Vignanakalar, three of Pralayakalar and three of Sakalar, total ten.

**Hindu Organ**

Friday, January 28, 1977

## Truth Alone Triumphs

No greater tribute could have been paid by the makers of the Constitution of the Republic of India to the revered Father of the Nation, Mahatma Gandhi than inscribing the meaningful phrase "Truth alone triumphs" as the motto of the country.

A seeker after truth as the Great Gandhiji had been, his experiments with the quality of being honest and sincere enabled him to shape the destiny of Bharata in conformity with the sublime ideals of its ancient culture based on Vedic tenets - renunciation and selfless service. The Republic Day of India, therefore, appropriately reminds the people of the lofty ideals that have been set by the framers of that Constitution placing firm emphasis on the spiritual aspect in political affairs.

Mahatmaji served mankind during his entire life time. This was his worship of the Almighty. The upliftment of the neglected, the under-developed, the rejected sections of the teeming millions of India. occupied his undivided attention so much that under his unique leadership the leaders of the various movement for freedom had to work wholeheartedly for that cause.

The Bhoodan movement, developed by Acharya Vino Bhave one of his devoted disciples, is a practical exposition of the ideal of renunciation and service. After three decades of republican rule India has grown in its stature in the comity of nations and has proved its worth as a unit fit to participate in the leadership of the world. This is sufficient testimony to the efficacy of the enlightened principles of the rule of law on the basis of the ancient Vedic culture.

## IRREPARABLE LOSS

BY V. SIVASAMY

"An irreparable loss to the University of Sri Lanka Jaffna Campus has occurred with the sudden and untimely death of the senior Professor and Dean of the Faculty of Science, the late Prof. P. Kanagasabapathy", said Prof. K. Kailasapathy, while speaking at the funeral of Prof. P. Kanagasabapathy.

Prof. Kanagasabapathy hails from a distinguished Saiva family from Elalai Jaffna noted for scholarship in Tamil Saivasiddhanta and Siddha and Ayurveda medicine. After a brilliant academic career at the Jaffna Hindu College and later at the University of Ceylon and at the Cambridge University where he obtained the M. Sc. degree in Mathematics, he joined the Department of Mathematics at the University of Ceylon.

During his career as a lecturer and later as professor of Mathematics for nearly 30 years, he has taught thousands of students who adorn the various walks of life in our country and abroad. He has also published a number of research articles in various journals in Ceylon and abroad. He has inspired many to do further research. When the Jaffna Campus was establised in October 1974, he was the senior Professor who willingly accepted the invitation to become the first Dean of the Faculty of Science and Professor of Mathematics at the new Campus where facilities were so limited. From then onwards he put his heart and soul in the building up of the new Campus. The Jaffna Campus was fortunate to have the academic brillance, mature scholarship and experience of this Professor at the initial stages of its growth.

He was heading two departments—the departments of Mathematics and Statistics. The Statistics oriented course in Mathematics is a speciality of this Campus. It was his aim to build up an institute of Statistics of a very high standard like that of the Indian Institute of statistics of international fame in Calcutta. Further he was very anxious to have all the faculties of the Campus at the Thirunelvely premises. He was all the more anxious in building up the Faculty of Science. He played a vital role in the planning of the new buildings for the Faculty of Science, the first stage of which will be completed by about the middle of this year. It is a great pity that the late Professor didn't live to see the completion of the buildings. He was always speaking about the great day when the Faculty of Science would move into the new buildings

He was a very conscious teacher noted for clear exposition of his subjects. Students following Arts courses too were so attracted and inspired by his teaching that they took up Mathematics as a subject. He used to spend most of his time in the Campus attending to his duties in various capacities.

He was an example of a staunch Saiva Professor a true Karmayogi ever devoted to his work without expecting any reward A lasting testimony to his great devotion to Saivism and capacity for organization is the Kulanoik-kumaran Temple at the Peradeniya Campus. When so many Saiva dons shirked or pooh—poohed the idea of constructing a temple at Peradeniya for various reasons, he took up the challenge and completed the temple within, a short period, associated himself with the educational and religious activities of his village. He was a great nationalist.

He was a very amiable Professor with a beaming smile on his face always to greet students, colleagues, friends and others. His simplicity and humility were remarkable. Any one could approach him and get his help,

It was one of his aims to build up the new Campus into a great centre of scholarship and research. He was the first to institute not only the undergraduate studies but also post-graduate studies at the new Campus.

Following the ideals of the great Tamil poet Bharatiyar, he was anxious to promote scientific literature in Tamil. He was the life wire behind the Uttu publications — devoted to the spread of scientific ideas in Tamil. His sudden death is a great loss to the Tamil Speaking people.

At the funeral held on the 25th of January, the President of the Jaffna Campus Prof K. Kailasapathy, Prof. S. Vithiyanandan (a close associate and friend of the late professor for a long time at the Peradeniya Campus) the employees and students of the Jaffna Campus and members of the public paid glowing tributes to the great life and work of the late Professor.

Though Professor Kanagasabapathy is no more in this mortal world, his noble ideals will inspire generations of students and teachers particularly of the Jaffna Campus, besides the Peradeniya and Colombo Campuses where he served for a longer period of time. May the sacred Feet of the Great Lord of Dance (Siva) grant His devotee the eternal place.

## A Garland of Tamil Inscriptions

Continued from last issue

**Kankuveli**

This is an inscription set up in the compound of a Sivan temple about 4 miles west of the 62nd mile stone on the road from Trincomalee.

Among the conclusions to be drawn from the inscription, Brohier has pointed out, (Survey Department: News Letter 1949) are that the Veli a South Indian measure was in use in Ceylon and that it discloses the derivation of Trincomalee.

While Nevill ("Taprobanian", Vol. 3). has pointed out that it is evidently ancient and confirms the account of the Kalvettu of the government of the district by a Vanniyan as much as an hereditary Doge of Venice would have done with his council of the seven Adaggas.

**Verugal**

This Tamil inscription was found in a temple on the banks of the Verugal Aru. Nevill, (Taprobanian Vol. 2, p 163) in his reference to this inscription has pointed out "The site is of such great antiquity that it is traditionally said to have been visited by Skanda himself, after his flight from Suran ... The temple now holds in its sanctuary his two wives, but anciently there was only the usual vel or dart......

**Thirukovil**

There are two inscriptions which are set up in village of the same name on the east coast South of Kalmunai. One inscription according to Nevill ("Taprobanian", Vol. 1 p 4) conveys land to the Sivanana Sankakara Kovil, now known as Thirukovil in the Batticaloa District, while the other appears to be a reference to a building gifted to the Cittira Valayuta Swami Kovil.

**Devinuwara**

The trilingual (Tamil, Persian, Chinese) inscription is supposed to have been installed at the ancient Hindu temple at Devinuwara, (Dondra). This inscription can now be seen at the Colombo Museum. This is supposed to have been installed by the Chinese admiral who came to Ceylon and captured the King of Kotte, (Kotai. Tamil for fort) The temple at Devinuwara has been indicated by Ptolemy in his geography of Ceylon (C. 100 A. D.)

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday January 28, 1977.

Editor-in-Chief R. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org